UNIA

Die Gewerkschaft.

- வேலைசார் சலுகைகள், உரிமைகளுக்காகவும் முக்கியமாக சமூக முன்னேற்றத்திற்காகவும் தொண்டு செய்ய Unia வழிவகுக்கிறது.
- உங்களுக்கு வேலைசார்பான, சமூககாப்புறுதி, வெளிநாட்டவர்களுக்கான சட்டம் என்பவற்றில் ஏற்படும். வினாக்களுக்கு எமது கிளைகளில் உங்கள் மொழிகளில் தகுதி வாய்ந்த தொழிற்சங்கவாதிகளால் ஆலோசனை வழங்கப்படும்.

ஒற்றுமையே எமது பலம்!

Unia Zentralsekretariat
Weltpoststrasse 20
Postfach 272
CH-3000 Bern 15

Geschäftsantwortsendung Invio commerciale-risposta
Envoi commercial-réponse

Nicht frankieren
Ne pas affranchir
Non affrancare







## சம்பளத்துடனான விடுமுறைநாட்கள்

- கணவன்,மனைவி, பெற்றோர் அல்லது பிள்ளைகள் இறந்தால் : 3 நாட்கள்
- சகோதரர்கள் அல்லது மாமா, மாமி : 1 நாள்
- சொந்த திருமணம் : 3 நாட்கள்
- சொந்தமாக பிள்ளை பிறந்தால் :1நாள்
- ராணுவபரிசோதனை : 1 நாள்
- வீடு மாறினால் (ஆகக்குறைந்தது 1 வருடத்தில் ஒரு தடவை) : 1 நாள்
- தொழிற்சங்கத்தில் தெரிவுசெய்யப்பட்ட பதவி நிலையில் இருப்பவர் : 1 நாள்

## சுகயீனமாக உள்ளபோது செலுத்தப்படும் சம்பளம்

சகல வேலையாட்களுக்கும் வாரத்திற்கு 12.5 மணித்தியால வேலை கிடைக்கப்பெற்றால் அவர்கள் சுகயீனப்படும் போது அவர்களுக்கான காப்புறுதி செய்யப்பட்டிருக்கும். சுகயீன நாளுக்குரிய சம்பளம் சுகயீனமுற்று 3 நாட்களுக்கு பிறபாடு அவர்கள் பெற்ற கடைசி சம்பளத்தில் 80 % வழங்கப்படும். (அல்லது கடந்த 6 மாதங்களில் ஒரே சீராக இல்லாது வேலை செய்யப்பட்டிருந்தால் அந்த 6 மாத சராசரி) வழங்கப்படுவதுடன் ஆகக்குறைந்தது 730 நாட்களுக்கு பணம் அக்காலப் பகுதிக்கு கிடைக்கும். முதல் 2 நாட்களும் Karenztag எனப்படும்— சுகயீன காப்பீட்டு சம்பளம் கிடைக்கப் பெறாது. யாரெல்லாம் கிழமைக்கு 12.5 மணித்தியாலத்திற்குள் வேலை செய்கிறார்களோ அவர்கள் வேலை செய்ய தொடங்கிய முதல் வருடத்தில் சுகயீனமுற்றால் 3 வாரத்திற்கு சம்பளம் வழங்கப்படும். கூடிய காலம் வேலை செய்திருந்தால் அதற்கேற்றபடி சம்பளம் நிர்ணயிக்கப்படும். (கால அடிப்படை மாநிலங்களுக்கிடையே வேறுபட்டது. உங்கள் தொழிற்சங்கத்தை நாடி ஆலோசனை பெறலாம்.)

## போக்குவரத்து நேரங்கள்

வேலைத்தளத்திலிருந்து வாடிக்கையாளரின் இடம் வரையுள்ள போக்குவரத்து வேலைநேர ஊதியமாக வழங்கப்படும். (வேலைநேரம் அத்துடன் போக்குவரத்து செலவு) நீங்கள் வதியும் இடத்திலிருந்து வேலைத்தளத்திற்குரிய போக்குவரத்து செலவு வழங்கப்படமாட்டாது. வெளிவேலைக்கு போகும் போது வேலையாட்கள் அனைவரும் ஒன்றிணையும் இடத்திலிருந்து வாடிக்கையாளர் வரையுள்ள போக்குவரத்து நேரமும், பயணசெலவும் ஊதியமாக வழங்கப்படும். அது தவிர வேலைநிறுவனத்திலிருந்தே எப்பொழுதும் சம்பளத்திற்குரிய கொடுப்பனவுகள் கணிக்கப்படும்.

## மதிய உணவு

ஒரு நாளுக்குரிய வேலை ஆகக்குறைந்தது 6 மணித்தியாலங்களாக இருப்பின் அதேவேளை மதியஉணவு வேலைத்தளத்திற்கு வெளியே உண்ணவேண்டிய நிலை ஏற்பட்டால், நாளுக்குரிய மதியஉணவு செலவாக 16/=Fr. வழங்கப்படும்.

## வேலை சீருடை

வேலைக்குரிய சீருடை வேலைதருநரால் தரப்படும். ஆடையை கழுவுதல், திருத்துதல் வேலையாட்களின் கடமையாகும்.

## சேவைக்கால வெகுமதி

10 வருடத்தை பூர்த்தி செய்தவர்கள், அத்துடன் அதற்கு பிறபாடு வருகிற ஒவ்வொரு 5 வருடத்தையும் பூர்த்தி செய்பவர்கள் மாதச்சம்பளத்தில் கால் பங்கை வெகுமதியாக பெறலாம்.

## மொத்த செலவீன பங்களிப்பு தொகை

கூட்டுவேலை உடன்படிக்கையில் ஏற்படும் செலவீனங்களுக்காக வேலைசெய்பவர்கள் 0.4%, வேலைதருநர் 0.2% சம்பளத்திலிருந்து கொடுக்கவேண்டும். வேலையாளர்களுக்கான தொடர்ச்சியான கல்விநெறி (Weiterbildung) , நிறுவனங்கள் கூட்டுவேலை உடன்படிக்கையை (GAV) ஒழுங்காக பேணுதல் என்பவற்றை கண்காணிக்க செலவு ஏற்படுகின்றது. இதற்காக மொத்த செலவீன பங்களிப்பு தொகை (Vollzugskostenbeitrag) அறவிடப்படுகிறது. தொழில்சார் கல்விநெறியை (Lehrlinge) கற்பவர்கள் மாதத்திற்கு 1/=Fr கட்டணமாக செலுத்த வேண்டும். நீங்கள் தொழிற்சங்கத்தில் அங்கத்தவராக இருந்தால் நீங்கள் கட்டிய தொகையை மீளப்பெற்றுக் கொள்ளலாம்.

## Unia என்றால் யாரை குறிப்பிடுகிறது.

சுவிஸில் 200 000 அங்கத்தவர்களை கொண்ட, உள்ளக தேர்ச்சி பெற்ற மிகப்பெரிய தொழிற்சங்கம Unia ஆகும். கூட்டுவேலை உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவது மட்டுமில்லாது சிறந்த சம்பளம், சமூகநல விடையங்கள், வேலைச்சலுகைகள் என்பவற்றில் கவனம் செலுத்துவதுடன் பல சேவைப்பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. வேலைசெய்பவர்கள் அனைவரும் தமது வேலைத்தள பிணக்குகள், சமூக காப்புறுதிகள், தொழில்சார் கல்வி, வேலையிழப்பு சம்பந்தமாக எம்மை நாடுவதுடன் எமது நிறுவனம் உங்கள் சார்பாக நீதிமன்றம் வரை சென்று வாதாடும். Unia தொழிற்சங்கம் சுவிஸ் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஒரு பலமான வலையமைப்பை கொண்டதாகவும் — உங்களுக்கு அருகில் உள்ளதாகவும் — வளர்ச்சியடைந்த கட்டமைப்பு, சம்பந்தப்பட்டவர்களுடன் நல்ல உறவை பேணல் மூலமாக நீங்கள் தேர்ந்தெடுக்கும் தகுதிவாய்ந்த தொழிற்சங்கமாகவும் உள்ளது.

**Unia Zentralsekretariat**
Weltpoststrasse 20
Postfach 272
CH-3000 Bern 15
T +41 31 350 21 11
info@unia.ch
**www.unia.ch**

உங்களுக்கு அருகில் உள்ள Unia

UNIA

Die Gewerkschaft.
Le Syndicat.
Il Sindacato.



# துப்பரவுபணியில் ஈடுபடுவோருக்கான கூட்டுவேலை உடன்படிக்கை 2016/2017
# டொச்மொழி பேசும் சுவிஸ் பகுதிகளுக்கான வேலை நிபந்தனைகள்!

# வேலை நேரங்களை எப்பொழுதும் கணிப்பிட வேண்டும்!

துப்பரவுபணிகளில் ஈடுபடுவோர் தமது வேலை நேரங்கள் சரியாக கணிப்பிடப்படுவதில்லையெனவும், குறைந்த மணித்தியாலங்களுக்கே சம்பளம் கிடைக்கப்பெறுகிறது எனவும்

துப்பரவுபணிகளில் ஈடுபடுவோர் தமது வேலை நேரங்கள் சரியாக கணிப்பிடப்படுவதில்லையெனவும், குறைந்த மணித்தியாலங்களுக்கே சம்பளம் கிடைக்கப்பெறுகிறது எனவும் முறையிட்டுள்ளார்கள். இத்தேவை கருதி புதிய உடன்படிக்கையில் (Vertrag) வேலைக்குரிய சட்ட அமுலாக்கலை மேற்கோள்காட்டி இணைத்துள்ளோம். ஒவ்வொரு வேலை நாளுக்குரிய நேரமும் கணிப்பிடப்படவேண்டுமென திட்டவட்டமாக கூறப்பட்டுள்ளது. நேர மதீப்பீட்டு அறிக்கை இலத்திரனியல் கருவி மூலமாக அல்லது கையால் எழுதப்பட்ட மதிப்பீட்டு பிரதியாக அமையவேண்டும். அங்கு குறிப்பிடப்பட வேண்டியவை :

- எந்த பகுதியில் (Objekt) பணியாற்றல்.
- எத்தனை மணிக்கு ஆரம்பமாகி, முடியும் நேரங்கள். (உ+ம்: ஆரம்பம் 7.35 மணி — முடிவு 12.45 மணி.)
- எப்போது பணம் செலுத்தப்படாத இடைவேளை (உ+ம்: 9.45 முதல 10.00 மணி வரை)

பொதுவாக ஒவ்வொரு கிழமையும் வேலை செய்பவர் இம்மதிப்பீட்டு அறிக்கையில் கையொப்பமிட வேண்டும்.

நேரங்கள் சரியாக உள்ளதா என்பதை கணிப்பிட்டே கையொப்பமிட வேண்டும். வேலை நேரங்கள் கணிப்பீட்டுக்குள் வராமல் அல்லது பிழையான கணீப்பீடாக இருந்தால், உங்கள் வேலைநேரங்களை ஒரு நாட்காட்டியில் நாளாந்தம் எழுதுவதுடன் எமது தொழிற்சங்கமான Unia வை நாடி ஆலோசனை பெறவும்.



# தகைமை, தகுதி தேர்ச்சி என்பவை புதிய கூட்டு உடன்படிக்கையில்.

## தகைமை அடிப்படை

பொதுவான வேலையாட்கள் தொடங்கி மேலதிகாரி (Vorarbeiter/-in) தளமுதன்மை அதிகாரி (Objektleiter/-in) வரை 5 பணியாட்களுக்கு மேலுள்ள நிறுவனங்களுக்கு தகைமை கணிக்கப்படும். 5 பேருக்கு குறைவாக உள்ள நிறுவனங்களில 2012 லிருந்து அடிப்படை சம்பளம் கணிக்கப்படும். பகுதி நேர வேலையாட்களுக்கும் இவ்வுடன்படிக்கை பொருந்தும். இளையவர்கள், விடுமுறையில் வேலை செய்பவர்களுக்கு இவ்வுடன்படிக்கை செல்லாது.

## தகுதி அடிப்படை

சாதராண பராமரிப்பு வேலையாட்கள் I: பராமரிப்பு துப்பரவாக்கலில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கான வேலைகள் (பொதுவான துப்பரவாக்கல் வேலைகள் உ+ம் : காரியாலயங்கள் துப்பரவாக்கல் ) ஆரம்பத்திலிருந்து 3 வருடங்கள் முடியும் வரை.

சாதராண பராமரிப்பு வேலையாட்கள் II: பராமரிப்பு துப்பரவாக்கலில் ஈடுபட்டுள்ள 4 வருடத்தில் காலடி எடுத்து வைத்தவர்கள்

சாதராண பராமரிப்பு வேலையாட்கள் III: பராமரிப்பு துப்பரவாக்கலில் ஈடுபட்டுள்ள 7 வருடத்தில் காலடி எடுத்து வைத்தவர்கள்.

விசேட துப்பரவாக்கல் வேலையாட்கள் I: தொழிற்துறை சார்பான கல்வியற்றவர்கள், ஆனாலும் துப்பரவு துறையில் முடிந்த வேலைகளை நிறைவேற்றுபவர்கள் (உ+ம்: கட்டிட துப்பரவாக்கல், இடம்மாறும் போது துப்பரவாக்கல், கட்டிட முகப்பை துப்பரவாக்கல்) 4 வருடம் பூர்த்தியாவதற்குள் விசேட தகைமை பெற்றிருக்க வேண்டும்.

விசேட துப்பரவாக்கல் வேலையாட்கள் II: கற்றுத் தேர்ந்த வேலையாட்கள் அல்லது 4வருட அனுபவமிக்கவர்கள் அல்லது விசேட துப்பரவாக்கல் பணியில் அரசதகைமை பத்திரம் பெற்றவர்கள்.

விசேட துப்பரவாக்கல் வேலையாட்கள் III: கற்றுத் தேர்ந்த விசேடதுறைசார் அரசுதகைமை சான்றிதழ் பெற்ற அல்லது அரசதகைமை பத்திரம் பெற்று 2வருடத்தை பூர்த்தி செய்தவர்கள்.

வைத்தியசாலை துப்பரவாக்கல் பணியாளர்கள் I: 3 வருடத்தை துப்பரவாக்கல் வேலையில் பூர்த்தி செய்தவர்கள்.

வைத்தியசாலை துப்பரவாக்கல் பணியாளர்கள் II: 4 வது வருடத்தில் காலடி எடுத்து வைத்த பணியாளர்கள்.

வைத்தியசாலை துப்பரவாக்கல் பணியாளர்கள் III: 7 வது வருடத்தில் காலடி எடுத்து வைத்த பணியாளர்கள்.

# கூட்டுவேலை ஒப்பந்தம் 2016/2017



## மணித்தியாலத்திற்கு ஆகக் கூடிய சம்பளம்

| வகைப்படுத்தல் | 2016 | 2017 |
|---|---|---|
| சாதாரண துப்பரவாக்கல் வேலை I | 18.50 | 18.80 |
| சாதாரண துப்பரவாக்கல் வேலை II | 18.70 | 18.90 |
| சாதாரண துப்பரவாக்கல் வேலை III | 19.00 | 19.20 |
| விசேட துப்பரவாக்கல் வேலை I | 20.40 | 20.90 |
| விசேட துப்பரவாக்கல் வேலை II | 23.05 | 23.30 |
| விசேட துப்பரவாக்கல் வேலை III | 26.50 | 26.80 |
| வைத்தியசாலை துப்பரவாக்கல் வேலை I | 19.25 | 19.50 |
| வைத்தியசாலை துப்பரவாக்கல் வேலை II | 19.65 | 19.90 |
| வைத்தியசாலை துப்பரவாக்கல் வேலை III | 20.05 | 20.30 |

## தொடர்ந்தும் அதே சம்பள அடிப்படையில்

பழைய வேலைதருநர் மாறி புதிய வேலைதருநர் நிறுவனத்தை நிர்வகிக்கையில் வேலையாட்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சம்பளம் தொடர்ந்தும் வழங்கப்படும்.

## 13.மாத சம்பளம்

சகல துப்பரவு பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கும் 13 மாத சம்பளம் வழங்கப்படும்.

## வேலை நேரங்கள்

கிழமைக்குரிய வேலைநேரம் சாதாரணமாக 42 மணித்தியாலங்கள். மேலதிகமாக செய்யப்பட்ட மணித்தியாலங்கள் அடுத்து வருகின்ற ஆண்டில் பங்குனி 31—ம் திகதிக்குள் வழங்கப்படல் வேண்டும். அது சாத்தியப்படாத பட்சத்தில் 25% மேலதிக கொடுப்பனவு அதற்காக வழங்கப்படவேண்டும்.

## விடுமுறை

- 5 வாரங்கள் அல்லது 25 வேலைநாட்கள் 20வயது வரை
- 4 வாரங்கள் அல்லது 20 வேலைநாட்கள் 21வயது ஆரம்பத்திலிருந்து
- 5 வாரங்கள் அல்லது 25 வேலைநாட்கள் 50வயது ஆரம்பத்திலிருந்து, அத்துடன் நிறுவனத்தில் குறைந்தது 5 வருடத்தை பூர்த்தி செய்திருந்தால்.

## விடுமுறை நாட்கள்

01. August உட்பட, 8 மாநில விடுமுறை நாட்களும் சம்பளத்துடன் கூடிய விடுமுறைநாட்கள்.

## மகப்பேற்று கால விடுமுறை

குழந்தை பிறந்த நாளிலிருந்து 16 வாரங்கள் மகப்பேற்றுகால விடுமுறையாகவும், இறுதியாக வழங்கப்பட்ட சம்பளத்தின் 80% அக்கால ஊதியமாகவும் கிடைக்கப்பெறும். அல்லது (கடந்த 6 மாதங்களின் சம்பளத்தின் சராசரி வருமானம் கணிக்கப்படும்.) வேலைமணித்தியாலங்கள், வயது முதிர்ந்தோர் காப்புறுதி (AHV-Pflicht) என்பவற்றை பொறுத்து வேலையாட்களுக்கு சட்டரீதியான மகப்பேற்று கால ஊதியம் வழங்கப்படாத நிலையில், சம்பந்தப்பட்டவர்களுக்கு நாம் மேற் கொண்டுள்ள கூட்டுவேலை ஒப்பந்தம் காரணமாக 8 வாரத்திற்கு 80% சம்பளம் வழங்கப்படும்.

## ஆகவே உங்கள் நாளாந்த வேலைக்கு பலமான பங்காளி வேண்டும் — Unia வில் அங்கத்தவராக இணையுங்கள்!

- ☐ தயவுசெய்து டொச்மாநில துப்பரவு பிரிவிற்கான கூட்டு வேலை ஒப்பந்தத்தை(GAV) எனக்கு அனுப்பவும்.
- ☐ எனக்கு இது சார்பான கேள்விகள் உண்டு. என்னுடன் தொடர்பு கொள்ளவும்.
- ☐ நான் Unia வில் இணைய விரும்புகின்றேன்.
- ☐ தயவுசெய்து Unia சம்பந்தமான மேலதிக தரவுகளை அனுப்பி வைக்கவும்.

Name ____________ Vorname ____________

Adresse ____________ PLZ/Ort ____________

Tel. ____________ E-Mail ____________